## நல்லாட்சிக்கான ஊக்குவிப்பாக தேசிய ஊடகத்தை பயன்படுத்தல்

அரகலய போராட்டம் 2022ஆம் ஆண்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டில் இருந்து வெளியேற்றியது முதல் நாட்டின் ஆட்சி முறையில் நடைமுறை மாற்றம் (சிஸ்டம் சேன்ஞ்) வேண்டும் என்ற விஷயம் பல மட்டங்களில் விவாதப் பொருளாகியிருக்கிறது. எனினும் ஜனாதிபதியை வெளியேற்றி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட பின்னரும் நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார விடயங்களில் நடைமுறை மாற்றங்களுக்கான சாதகமான சூழல்கள் இதுவரை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

மிகத் தீவிரமான பொருளாதார நெருக்கடியை நாடு சந்தித்ததோடு கலாசார மற்றும் சமூகக் கிளர்ச்சியும் ஏற்பட்டது. இது மக்களின் இயல்பு வாழ்வில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சமீபத்தில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள், முக்கிய அரசியல் கட்சிகளை மக்கள் அவற்றின் பாரம்பரியத்தை கவனத்தில் கொள்ளாமல் நிராகரித்திருப்பதையும் மூன்றாவது சக்தியான தேசிய மக்கள் சக்தி கட்சிக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதையும் காட்டுகின்றன.

அக்கட்சியின் மூன்று சதவீத வாக்கு வங்கியை 42 சதவீதமாக உயர்த்தியுள்ளனர். நாட்டின் ஆட்சி முறையில் புரட்சிகரமான மாற்றம் வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்பையே இது நிச்சயமாக வெளிப்படுத்தியிருக்கிறது.

முதலாவதாக, பொருளாதார மீட்சி என்பது தொடர்ச்சியான அபிவிருத்தியை நோக்கியதாக மிக விரைவாகவே மடை மற்றம் செய்யப்பட வேண்டும். எக்கச்சக்கமான லஞ்சம், ஊழல், அரசின் நிதி மற்றும் அதன் வளங்களை துஷ்பிரயோகம் செய்தல், அரசியல் ரீதியான தீர்மானங்கள், நியமனங்கள் என்பன முன்னாள் அரசுகளின் பாவங்கள் என்பதோடு அவை இனிமேலும் சகித்துக் கொள்ளக் கூடியவை அல்ல. மக்களிடம் தற்போதுள்ள இந்த அரசின் மீதான ஆதரவையும் நம்பிக்கையையும் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், நீதித்துறை மற்றும் சட்ட ஒழுங்கு ஸ்தாபிக்கப்பட்டு அவை காப்பாற்றப்பட வேண்டும்.

காமனி கொரயா நிதியம் என்பது கலாநிதி காமனி கொரயாவின் சிந்தனையில் பிறந்த கருவாகும். இலங்கையின் சமூக – பொருளாதார அபிவிருத்தியிலும் ஏனைய குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளின் அபிவிருத்தியிலும் புத்தாக்கங்கள் மற்றும் ஆதாரபூர்வமான உயர்தர பொருளாதார ஆய்வுகள் ஊடாக பங்களிப்பு செய்வதை இந்நிதியம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆய்வு என்பதை இந்நிதியம் வெறுமனே கல்விசார் முயற்சி என்பதற்கு மேலானதாகவே கருதுகிறது.

சமூக பொருளாதார மாற்றங்களுக்கான வினை ஊக்கியாகவே பார்க்கிறது. காமனி கொரயாவின் கனவும் அதுதான். காமனி கொரயா நிதியமானது இலங்கை புத்தாக்கிகளின் மண்டலத்தை உருவாக்கியது. அதன் மூலம் இருபது விடயங்கள்

தொடர்பான அறிக்கைகள் அந்தந்த நிபுணர்களின் ஆய்வுகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டன. அடையாளம் காணப்பட்ட விடயங்களின் தீர்வுகளுக்கான ஆலோசனைகள் பெறப்பட்டன. நல்லாட்சி தொடர்பிலான ஆய்வை கலாநிதி லொயிட் பெர்னாண்டோ சமர்ப்பித்திருந்தார். அதில், சாதகத் தன்மை கொண்ட ஒரு ஆட்சி முறையை அவர் விளக்கியிருந்தார். அது சரியான முறையில் நிறைவேற்றப்படுமானால் பொருளாதார மீட்சிக்கு மட்டுமின்றி, மக்கள் தற்போது எதிர்பார்த்திருக்கும் நடைமுறை மாற்றத்தையும் ஏற்படுத்தும்.

முறையான ஒரு ஆட்சியை உறுதிப்படுத்துவதில் ஊடகத்துக்கு மிக முக்கியமானதும் உறுதியானதுமான ஒரு கடமை உள்ளது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. 'நல்லாட்சிக்கான ஊக்குவிப்பாக தேசிய ஊடகத்தை பயன்படுத்தல்' (Catalyzing Good Governance Through National Media) என்ற இந்த நூலின் ஆசிரியர் ஷிரானி திசாநாயக்க ஒரு சிரேஷ்ட ஒளிபரப்பு ஊடகவியலாளராவார். ஊடகத்துறையை இன்று பாதிக்கும் குறைபாடுகளை தனது சொந்த அனுபவங்கள் ஊடாக முன்வைத்துள்ளார்.

ஊடகமானது ஏன் இன்று இந்த நிலையில் உள்ளது என்பதற்கான காரணங்களை அவர் இந்நூலில் ஆராய்ந்துள்ளார். இன்றைய நிலையில் இருந்து எவ்வாறு மீட்சி அடையலாம் என்பதற்கான சாதகமான வழிமுறைகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆட்சி முறைமையில் பங்களிப்பு, அலசல் பார்வை, வெளிப்படைத்தன்மை, பங்குடமை, பொறுப்பு கூறல், கணித்துக் கூறல் மற்றும் உற்பத்தித்திறன் என்பனவற்றில் அரச ஊடகங்கள் வினையூக்கியாக இருந்து செயல்பட வேண்டும் என்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில், இலங்கையின் தொலைக்காட்சி ஊடக பரப்பில் எம்மை அழைத்துச் செல்லும் ஷிரானி, உள்ளார்ந்த ரீதியானதும், சுவையானதும் மற்றும் சிந்தனையைக் கிளறும் வகையிலுமாக அப்பயணத்தை நடத்திச் செல்கிறார். இது அவருடைய 40 ஆண்டு கால பயணத் தொகுப்பு. தன் விரக்தியை பதிவு செய்துள்ள இவர், அதற்கும் மேல் பயணித்து விஷயங்களை எவ்வாறு இன்னும் செம்மையாக ஆற்றியிருக்கலாம் என்பதையும் குறிப்பிடுகிறார்.

இந்நூலை கொழும்பு 7, இல. 21, ஹோர்டன் பிளேசில் அமைந்துள்ள காமனி கொரயா நிதிய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.